# Sample Question paper - ( Tamil )
## I - TERM (April 2010 - Sep 2010)

(Class - I X)

மாதிரி வினாத்தாள் - தமிழ்

ஒன்பதாம் வகுப்பு

(ஏப்ரல் 2010 - செப்டம்பர் 2010)

| | |
|---|---|
| Max. Marks : 80 | Time : 3 hours |
| மொ.மதிப்பெண்கள் : 80 | கால அளவு : 3 மணி |

The question paper is diveded in to four sections:
இக் கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | |
|---|---|---|
| **SECTION : A**<br>பிரிவு : அ | Reading comprehension<br>படித்தல் (உரைநடைப் பகுதி) | - 15 Marks<br>-15 மதிப்பெண்கள் |
| **SECTION : B**<br>பிரிவு : ஆ | **Writing**<br>எழுதுதல் | - 15 Marks<br>-15 மதிப்பெண்கள் |
| **SECTION : C**<br>பிரிவு : இ | Grammar<br>இலக்கணம் | - 15 Marks<br>-15 மதிப்பெண்கள் |
| **SECTION : D**<br>பிரிவு : ஈ | **Literature / Text Books**<br>இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் | - 35 Marks<br>-35 மதிப்பெண்கள் |

---

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### பிரிவு - அ

படித்தல் - 15 மதிப்பெண்

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

அனைத்து விளையாட்டுப் போட்டிகளின் இமயம் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி ஆகும். விளையாட்டு வீரர்களின் ஒரே இலக்கு

ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதும் அதில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெறுவதும் ஆகும்.

ஒலிம்பிக் போட்டி முதன் முதலாக கி.மு. 8 ஆம் நூற்றாண்டில்கிரேக்கத்தில் உள்ள ஒலிம்பிய என்ற இடத்தில் நடைபெற்றது. கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை இப் போட்டி அங்கு நடைபெற்றது. அதன் பின் நின்று போன இப் போட்டி, பி,எஞ்சுக் கல்வியாளர் திரு. பியாரே தெ கொபர்டின் அவர்களின் முயற்சியால் கி.பி. 1896 ஆம் ஆண்டில் மீண்டும் தொடங்கப் பெற்றது. அது முதற் கொண்டு உலகின் பல்வேறு நாடுகளில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்று வருகிறது.

இப்போது ஒலிம்பிக் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒரு நாட்டில் நடைபெறுகிறது. இப்போது அனைத்து நாடுகளிம் பங்கேற்கும் உலகப் போட்டியாக நடைபெறுவதால் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முதல்தர விளையாட்டு வீரர்கள் இப் போட்டியில் பங்கேற்கின்றனர். போட்டியி வென்று பதக்கம் எபற்றால் உலகின் தலைசிறந்த விளையாட்டு வீரர் என்ற பெரும் புகழ் கிட்டும்.

நம் இந்திய வீரர்கள் பல முறை ஹாக்கிப் போட்டியில் தங்கம் வென்றுள்ளனர். தடை ஓட்டம், மற்போர்,. டென்னிஸ், பளு தூக்குத், குறி பார்த்துச் சுடுதல், ஆகிய போட்டிகளில் வெண்கலம், வெள்ளிப் பதக்கங்களை வீரர்கள் வென்றுள்ளனர்.

**வினாக்கள்**

(i) ஒலிம்பிக் விளையாட்டு போட்டி முதன் முதல் நடைபெற்ற இடம் *(1)*

அ. இந்தியா

ஆ. சீனா

இ.தென் ஆப்பிரிக்கா

ஈ. ஒலிம்பிய

(ii) இப் போட்டி எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நடை பெறுகிறது?*(1)*

அ. ஒன்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை

ஆ. பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை

இ. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை

ஈ. ஒவ்வோர் ஆண்டும்

(iii) இந்திய வீரர்கள் பல முறை பதக்கம் பெற்ற விளையாட்டு *(1)*

அ. ஹாக்கி

ஆ. ஓட்டம்

இ.நீச்சல்

ஈ. ஈட்டி எறிதல்

(iv) கி.பி. 1896 இல் திரு. பியாரே தெ கொபர்டின் அவர்களால் ஒலிம்பிக் மீண்டும் தொடங்கப் பெற்றது. அவர், (1)

அ. ஆங்கிலேயர்

ஆ. அமெரிக்கர்

இ. பிரஞ்சுக்காரர்

ஈ. இந்தியர்

(v) ஒலிம்பிக்விளையாட்டுப் போட்டி அனைத்துலக விளையாட்டுப் போட்டிகளின் (1)

அ. தாயகம்

ஆ. இமயம்

இ. எவரெஸ்ட்

ஈ. ஆலயம்

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா! என்று வியந்தவர் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஆவார். தூத்துக்குடி எட்டையபுரத்தில் சின்னசாமி அய்யருக்கும் இலக்குமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். அடிமைப் பட்டுக் கிடந்த இந்தியாவில் வீறு கொண்டு எழுந்த விடுதலை வேட்கைக்குத் தம் கவிதைகளால் உரம் ஏற்றினார். தேசியக் கவி என்றும் மகா கவி என்றும் போற்றப் பட்டார். இந்தியா, விஜயா என்ற இதழ்களை வெளியிட்டார். பாரதியா ர் கவிதைகள், பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு முதலிய கவிதைகள் மட்டுமின்றி பல கதைகளையும் வசன கவிதைகளையும் எழுதினார். அவருடைய வசன கவிதைகள் வால்ட விட்மன், கலீல் ஜிப்ரான் முதலிய கவிஞர்களுக்கு இணையாகக் கருதப்பட்டன. தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு புதிய பகுதி தொடங்கப் பட்டது. அறிஞரை பெருமக்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார்.

**வினாக்கள்**

(i) பாரின் மிசை ஆச்சரியம் எது? (1)

அ. ஆடல்

ஆ. பாடல்

இ. உறக்கம்

ஈ. பாட்டு

(ii) பாரதியார் பிறந்த ஊர் (1)

அ. மதுரை

ஆ. கடையம்

இ. எட்டையபுரம்

ஈ. தூத்துக்குடி

(iii) தேசியக் கவி என்றும் மகா கவி என்றும் யாரைப் போற்றுவர் (1)

அ. சுரதா

ஆ. பாரதியார்

இ. மு. மேத்தா

ஈ. மீரா

(iv) வால்ட் விட்மன், கலீல் ஜிப்ரான் என்பவர்கள் (1)

அ.கவிஞர்கள்

ஆ. ஓவியர்கள்

இ. தலைவர்கள்

ஈ. வீரர்கள்

(v) பாஞ்சாலி என்பது யாரைக் குறிக்கும் (1)

அ.கைகேயி

ஆ. சீதை

இ. திரௌபதி

ஈ. கண்ணகி

**3. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

சில நாளில் தோன்றி சில நாள் இருந்து சில நாளில் மறைந்து போவதாகிய இம் மக்கள் உடம்பிற் பிறந்தவர்களாக நாம் எந்த வகையான செல்வத்தைப் பெற முயல வேண்டுமென்றால் என்றும் அழியாததாய் உடம்பு அழிந்தாலுந் தான் அழியாமல் நமது உயிரோடு சேர்ந்து நம்மை எல்லாப் பிறப்புகளிலுந்த தொடர்ந்து வருவதாய் உள்ள அழிவிலாப் பெருஞ் செல்வத்தையே அடைதற்குக் கண்ணுங் கருத்துமாய் இருக்க வேண்டும். ஏன்? அழியாத செல்வத்தையே பெற வேண்டுமென்னும் விருப்பம் நம்மில் ஒவ்வொருவரிடத்தும் இயற்கையாகவே காணப்படுதலாலும் அவ்விருப்பம் இல்லாதவர்களை எவ்விடத்தும் எக்காலத்துங் காண்டல் கூடாமையானு

மென்க. ஒரு திங்கள், இரண்டு திங்களிற் கிழித்து போகுஞ் சீமைத் துணிகளை வாங்க விரும்புகின்றோமோ? பன்னிரண்டு பதினைந்து திங்கள் கிழியாமல் அழுத்தமாயிருக்கும் நாட்டுப் புடவைகளை வாங்க விரும்புகின்றோமோ? விலை சிறிது மிகுதியாய் இருந்தாலும் அழுத்தமாயிருக்கும் நீடித்திருக்கும் ஆடைகளையல்லவோ வாங்க ஆவல் கொள்கிறோம்.

**வினாக்கள்**

(i) *மக்கள் எச் செல்வத்தை அடைய முயலுவர்?* *(1)*

அ. கல்வி

ஆ. கேள்வி

இ.வீடு

ஈ. பணம்

(ii) *அழியாச் செல்வம் எது?* *(1)*

அ. நகை

ஆ. திலம்

இ.கல்வி

ஈ. இல்லம்

(iii) *கல்வி எத்தனை பிறவிகள் தொடர்ந்து வரும்?* *(1)*

அ. இப் பிறவி

ஆ. மறு பிறவி

இ. எல்லாப் பிறவி

ஈ. சென்றற பிறவி

(iv) எதில் கண்ணும் கருத்துமாய் விளங்குவர் *(1)*

அ. கல்விஞ் செல்வம்

ஆ. செவிச் செல்வம்

இ.பொருட் செல்வம்

ஈ. மக்கட் செல்வம்

(v) இப் பத்திக்குப் பொருத்தமானத் தலைப்பினை எழுதுக*(1)*

அ. பழைய செல்வம்

ஆ. அழியும் செல்வம்

இ. அழியாச் செல்வம்

ஈ. கல்வி

**பகுதி - ஆ**

1. கோடை விடுமுறையை உன்னோடு கழிக்க வருமாறு அழைப்பு விடுத்து உன் நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக (6)

(அல்லது)

உன் மிதி வண்டி காணாமல் போனது குறித்துக் காவல் துறை ஆணையருக்குப் புகார்க் கடிதம் எழுதுக

★ இரண்டு கடிதங்களிலும் உனது முகவரி பொன்னன்/ பொன்னி, 24, அம்மன் கோவில் தெரு , நெல்லை. என்று கொள்க.

2. **ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. (6)**

அ. உடலோம்பல் - உடல் நலச் சீர் கேடு - நல்லுணவு - உடற் பயிற்சி - சமசீர் உணவு - நோய் வரு முன் காத்தல் - சுகாதரமான வாழ்வு - முடிவுரை.

ஆ. முன்னுரை - தாய் நாட்டின் சிறப்பு - நம் கடமைகள் - குறிக்கோள்கள் - பணிகள் - கிராம முன்னேற்றப் பணிகள் - தவிர்க்கப் பட வேண்டியவை - முடிவுரை

இ. அறிவியல் வளர்ச்சி - இன்றைய வாழ்வில் அறிவியல் - அறிவியல் சாதனங்கள் - அதன் பயன்கள் - தொழில் வளர்ச்சி - நன்மை - தீமைகள் - முடிவுரை

3. **உனது ஊரில் நடைபெற்ற கண் தான முகாம் குறித்து அறிக்கை ஒன்று எழுதுக. (3)**

**(அல்லது)**

**உனது பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவனைப் பாராட்டி அறிக்கை ஒன்று எழுதுக.**

## பகுதி - இ

**1. சான்று தருக: (எவையேனும் மூன்று மட்டும்)** (3)

(i) உயிரளபெடை

அ. இலங்ங்கு

ஆ. ஓஒதல்

இ. எஃகிலங்கிய

ஈ. விடங்ங்

(ii) எழுத்துத் தொடர் மொழி

அ. பூ

ஆ. தா
இ. பதம்
ஈ. வா

(iii) ஓரெழுத்து ஒரு மொழி
அ. கண்
ஆ. பல்
இ. கடல்
ஈ. ஙா

(iv) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரத்திற்கு உதாரணம்
அ. வாக்கு
ஆ. பந்து
இ. தம்பி
ஈ. அஃது

(v) குற்றியலுகர்த்திற்கு உதாரணம்
அ. பசு
ஆ. தண்ணீர்
இ. குரங்கு
ஈ. கடல்

**2. நிரப்புக. (எவையேனும் மூன்று மட்டும்) (3)**

(i) எழுத்துகள் --------, ---------- என இருவகைப்படும்.
அ. முதல், சார்பு
ஆ. இன்னிசை, சொல்லிசை
இ. குற்றியலுகரம், குற்றியலிகரம்
ஈ. தெரிநிலை , குறிப்பு

(ii) நெடில் எழுத்துகள் ------- பகுதியிலிருந்து பிறக்கின்றன
அ. கழுத்து
ஆ. மூக்கு
இ. மார்பு
ஈ. வாய்

(iii) இரு உதடுகளையும் குவிப்பதால் உண்டாகும் எழுத்து -------
அ. இ, ஈ
ஆ. அ

இ. ஒ, ஓ

ஈ. ஐ, ஔ

(iv) மேல், கீழ் உதடுகள் பொருந்துவதால் ----- எழுத்துகள் தோன்றுகின்றன

அ. ப,ம

ஆ. ய,ர

இ. ல,ள

ஈ. ர,ற

(v) சார்பெழுத்துகளின் இடப் பிறப்பு -------- எழுத்துகளின் இடப் பிறப்பாகும்

அ. முதல்

ஆ. ஆய்த

இ. மெய்

ஈ. அளபெடை

**3. கூறியவாறு செய்க. *(எவையேனும் மூன்று மட்டும்)* (3)**

(i) எடுப்பதும் *(அளபெடையாக்குக)*

அ. எடு

ஆ. எடுப்பது

இ. எடுப்பதூஉம்

ஈ. எடுப்பாஅதும்

(ii) பூ *(எழுத்துத் தொட்ர மொழியாக்குக)*

அ. மலர்

ஆ. வி

இ. அலர்

ஈ. அரும்பு

(iii) அது *( ஆய்தத் தொடர்க் குற்றியலுகரமாக்குக)*

அ. அதுவும்

ஆ. அவை

இ. அஃது

ஈ. அன்று

(iv) வருக *( ஓரெழுத்து ஒரு மொழியாக்குக)*

அ. வருக! வருக!

ஆ. வா

இ. போ

ஈ. செல்

(v) வயிறு (வன் தொடர்க் குற்றியலுகரமாக்குக)

அ. வாய்

ஆ. தொப்பை

இ. வீறு

உ. வயிற்று

**4. இலக்கணக் குறிப்பு தருக. (மூன்று மட்டும்)** **(3)**

(i) தீ

அ. பதம்

ஆ. சொல்

இ. ஓரெழுத்து ஒரு மொழி

ஈ. மொழி

(ii) விலங்கு

அ. எழுத்துத் தொடர் மொழி

ஆ. எழுத்து

இ. அளபெடை

ஈ. ஆய்தம்

(iii) இது

அ. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்

ஆ. வன் தொடர்க் குற்றியலுகரம்

இ. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

ஈ. முற்றியலுகரம்

(iv) எடுப்பதூஉம்

அ. குற்றியலுகரம்

ஆ. குற்றயலிகரம்

இ. ஓரெழுத்து ஒரு மொழி

ஈ. அளபெடை

(v) காசு

அ. குற்றியலிகரம்

ஆ. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்

இ. நெடில் தொடர்க் குற்றியலுகரம்

ஈ. வன் தொடர்க் குற்றியலுகரம்

**5. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (மூன்று மட்டும்) (3)**

(i) அ. நெடில் எழுத்துகள் கழுத்திலிருந்து பிறக்கின்றன.

ஆ. நெடில் கழுத்தில் பிறக்கும்

இ. நெடிற் தொடர் கழுத்தில் பிறக்கும்

ஈ. நெடிற் எழுத்து கழுத்தில் பிறக்கும்

(ii) அ. ஒரு அரசனைப் பார்த்தேன்

ஆ. ஒரு அரசனை பார்த்தேன்

இ. ஒரு அரசன் அவர்களைப் பார்த்தேன்

ஈ. ஓர் அரசனைப் பார்த்தேன்

(iii) அ. மலை வந்ததைக் கண்ட மயில் ஆடியது

ஆ. மழை வந்ததைக் கண்டு மயில் ஆடியது

இ. மளை வந்ததுக் கண்டு மயில் ஆடின

ஈ. மழை வந்ததை கண்டு மயிள் ஆடின

(iv) அ. முதலெழுத்துகள் பிறக்கும் இடம் கழுத்து என்பர்

ஆ. முதலெழுத்துகள் பிறக்கும் இடம் கழுத்து என்பர்

இ. முதலெழுத்துகள் பிரக்கும் இடம் கழுத்து என்பர்

ஈ. முதலெழுத்துகள் பிறக்கும் இடம் களுத்து என்பர்

(v) அ. மொளியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் துணை எச்யவது இலக்கணம்

ஆ. மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் துனை செய்வது இலக்கணம்

இ. மொழியைப் பிளையின்றிப் பேசவும் எழுதவும் பயன்படுவது இலக்கணம்

ஈ. மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் துணை செய்வது இலக்கணம்.

**பகுதி – ஈ**

1. **கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

தீந்தமிழ் என்றும் இன்பத் தமிழ் என்றும் சொல்வதற்கேற்பத் தமிழ் மொழி அமைந்துள்ளமையை அனைவரும் அறிவர். அதன் வடிவ அமைப்பே உயிருக்கு இன்பம் அளிக்கக் கூடியதாகும். அதனுடைய சொற்களின் சொற்பொருள் சிறப்பும் தமிழுக்குரிய உயர் இயல்புகளுள் முதன்மை பெற்றவையாகும். தூய தமிழ்ப் பற்று உண்மைத் தமிழ்ப் புலவர் உள்ளங்களிலிருந்து மறைந்து விடவில்லை. நற்றமிழர்களும் அதனைப் போற்றினர். ஆங்கிலம் கற்ற தமிழர்களும் தூய தமிழே நற்றமிழாகும் என்ற கருத்தை ஏற்றனர். சாமி வேதாசலம் என்னும் மும்மொழிப் புலவர் தம் பெயரை மறைமலை அடிகள் என மாற்றிக் கொண்டார். நாராயண சாஸ்திரியார் பரிதிமாற் கலைஞர் ஆனார்.

**வினாக்கள்**

(i) தீந்தமிழ் என்றால் (1)

அ. வளர் தமிழ்
ஆ. இன்பத் தமிழ்
இ. செந்தமிழ்
ஈ. பைந்தமிழ்

(ii) தமிழுக்குரிய உயர் இயல்புகள் (1)

அ. ஒழுக்கம்
ஆ. பண்பாடு
இ. வீரம்
ஈ. புறமுதுகிடுதல்

(iii) தமிழ்ப் புலவர் உள்ளங்களிலிருந்து மறையாமல் இருப்பது (1)

அ. மொழிப் பற்று
ஆ. கவிதைப் பற்று
இ. இலக்கியப் பற்று
ஈ. இலக்கணப் பற்று

(iv) ஆங்கிலம் கற்றவர்களும் நற்றமிழ் என ஏற்றுக் கொண்டது (1)

அ. செந்தமிழை

ஆ. தூய தமிழை
இ. உயர் தமிழை
ஈ. தனித் தமிழை

(v) *மறைமலை அடிகளின் இயற்பெயர்* *(1)*
அ. சாமிநாதன்
ஆ. சாமி வேதாசலம்
இ. வேதாசலம்
ஈ. வேதநாயகம்

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

காவியங்களும் கவிதைகளும் தமிழ்ச் சங்கத்தில் வந்து குவிந்த வண்ணமாய் இருந்தன. பல தொழில்களில் ஈடுபட்ட அறிஞர்கள் தமிழ்ப் பாட்டிசைத்தார்கள். அவர்களுள் ஒருவர் மதுரையில் கூல வாணிகம் செய்து வந்த சாத்தனார் ஆவார். கூலம் என்பது நெல் முதலிய பதினெட்டு வகையான உணவுப் பொருள்களின் பொதுப் பெயராகும். கூலக் கடை வைத்து வாணிகம் செய்த சாத்தனார் கூலவாணிகன் சாத்தனார் என்னும் பெயர் பெற்றார். இவரே மணிமேகலை என்ற சிறந்த காவியம் இயற்றியவர். சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகளும் மணிமேகலை இயற்றிய சாத்தனாரும் உயரிய நண்ராய் இருந்தனர். இவ்விருவரும் ஒரு நாட்டவர் அல்லர். ஒரு குலத்தவர் அல்லர். ஒரு மதத்தினர் அல்லர். சேர நாட்டைச் சேர்ந்தவர் இளங்கோ. அரசர் குலத்திற் பிறந்தவர். சாத்தனார் வணிக குலத்தவர். இளங்கோ சமண சமயத்தைச் சார்ந்தவர். சாத்தனார் புத்த மதத்தைத் தழுவியவர். இவ்வாறு நாட்டாலும் குலத்தாலுத் மதத்தாலும் வேறுபட்டிருந்த பெருங் கவிஞர் இருவரும் தமிழ் உணர்ச்சி ஒன்றாலேயே தலைசிறந்த நண்பராய்த் திகழ்ந்தனர்.

**வினாக்கள்**

(i) *யார் யார் தமிழ்ப் பாட்டிசைத்தார்கள்?* *(1)*
அ. அறிஞர்கள்
ஆ. கவிஞர்கள்
இ. புரவலர்கள்
ஈ. அரசர்கள்

(ii) *கூலம் என்றால் என்ன?* *(1)*
அ. குப்பை
ஆ. நெல்

இ. நெல் முதலிய பதினெட்டு வகையான உணவுப் பொருள்கள்
ஈ. பருப்பு

(iii) மணிமேகலையை இயற்றியவர் *(1)*
அ. இளங்கோ
ஆ. சாத்தனார்
இ. கம்பர்
ஈ. வள்ளுவர்

(iv) தலைசிறந்த நண்பர்களாய்த் திகழ்ந்தவர்கள் *(1)*
அ. வள்ளுவன் - இளங்கோ
ஆ. கம்பன் - இளங்கோ
இ. இளங்கோ - சாத்தனார்
ஈ. சாத்தனார் - வள்ளுவர்

(v) சாத்தனார் எந்த மதத்தைச் சார்ந்தவர்? *(1)*
அ. சைவம்
ஆ. வைணவம்
இ. பௌத்தம்
ஈ. சமணம்

**3. கீழ்வரும் பாடல் அடிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க. *(4)***

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணியாம்
தான் செல் உலகத் தறம்

**வினாக்கள்**

(i) ஆண்மைக்கு அழகு
அ. வீரம்
ஆ. கொடை
இ. அறம்
ஈ. புகழ்

(ii) இந் நூல் ஆசிரியர் *(1)*
அ. சாத்தனார்
ஆ. இளங்கோ
இ. விளம்பி நாகனார்

ஈ. கம்பர்

(iii) நிலத்திற்கு அழகு (1)

அ. நெல், கரும்பு

ஆ. நெல் , மூங்கில்

இ. வரகு, கோதுமை

ஈ. பருப்பு , அரிசி

(iv) தாமரையால் அழகு பெறுவது (1)

அ. குளம்

ஆ. குட்டை

இ. ஏரி

ஈ. கடல்

**4. விடையளிக்க. (ஒன்றனுக்கு மட்டும்) (5)**

(அ). மொழியின் இன்றியமையாமையை விளக்குக.

(ஆ). மதுரை மன்னன் கற்றறிந்தோரைப் பாதுகாப்பவன் என்பதனை விளக்குக?

(இ). காமராசர் நடத்திய விடுதலைப் போராட்டங்களையும் அதன் விளைவுகளையும் கூறுக?

**5. ஏதேனும் ஒன்றினுக்கு விடையளிக்க. (5)**

(அ). குற்றச் செயல்களாக நான்மணிக் கடிகை கூறுவன யாவை?

(ஆ).புரட்சிக் கவிஞர் விரும்பும் புவியரசு எத்தகையது?

**6. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (2)**

(அ).தமிழ் மொழியளவிலும் எல்லையளவிலும் அடைந்த நிலையைக் கூறுக

(ஆ). பாண்டிய நாட்டின் சிறந்த செல்வங்கள் யாவை?

**7. விரிவாக விடையளிக்க (ஒன்று மட்டும்) (6)**

அ. முதல் லட்சியம் என்ற அகிலனின் கதையைச் சுருக்கி எழுதுக.

ஆ. மிட்டாய்க்காரன் என்ற கதையின் பொருத்தத்தைக் கூறுக.

**8. சுருக்கமாக விடையளிக்க (3)**

அ. இராமையாவின் பண்பு நலன்களை எழுதுக.

ஆ. முனுசாமியின் பண்பு நலன்களை எழுதுக.